# நாடக அறங்கள்

**முனைவர் க.ரேவதி**

**உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வுமையம்,**

**பாத்திமா கல்லூரி. revathirajanu@gmail.com**

46

**ஆய்வுச் சுருக்கம்**

ஆய கலைகளுள் குறிப்பிடத்தகுந்தது நாடகம். தமிழ் இலக்கண இலக்கியங்களில் நாடகம் குறித்த கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. காலத்தின் தேவைக்கு ஏற்ப நாடகங்கள் மலர்ந்தன. சங்கரதாஸ்சுவாமிகளால் நாடகம் புத்துயிர்பெற்றது. குழந்தை நாடக ஆளுமைகளுள் குறிப்பிடத்தகுந்தவர் வேலு சரவணன். குழந்தை நாடகத்தின் வழி பல மாற்றங்களைக் கொணர்ந்துள்ளார். மு.இராமசுவாமி குறிப்பிடத்தகுந்த போராளி. சமூக மாற்றம் தனிமனிதம் சார்ந்தது. பேசத் தயங்கும் பொருளைத் துணிந்து சொல்வதோடு செயல்படும் ஆற்றல் மிக்கவர். இவ்விருவரின் நாடகங்களும் சமூக அறங்களைப் பெணுவதாக அமைந்துள்ளன.

**திறவுச்சொற்கள்**

1. குழந்தை நாடகம்,2. பூதக்கண்ணாடி,3. செல்லீ,4. கடல் பூதம்,5. வேலு சரவணன்

6. வலிஅறுப்பு

**முன்னுரை**

நாடகம் தொன்மையானது. பாமர மக்கள், படித்தவர்கள், ஆட்சியில் உள்ளோர் என அனைவராலும் விரும்பிப்பார்க்கப்பட்ட கலை. இக்கலை வடிவம் காலம்தோறும் மக்களுக்கு அறங்களை விளக்கியுள்ளது. விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. முடிவின் அடிப்படையில் நாடகங்களை இன்பியல், துன்பியல் என்று வகைப்படுத்தினர். நாடகத்தின் கருப்பொருளை அடிப்படையாகக்கொண்டு புராணம், சமூகம், புராணமறுப்பு, மீட்டுருவாக்கம், நகைச்சுவை என வகைப்படுத்தினர். அவற்றுள் குறிப்பிடத்தகுந்தது குழந்தைகள் நாடகமாகும்.வருங்கால சமூகத்தை வடிவமைக்க வேண்டிய குழந்தைகள் வாழ்வியலறங்களோடு திகழ நாடகம் ஒரு கருவியாகச் செயல்படுகின்றது. நாடகக்கலை உணர்த்தும் அறங்களை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

தமிழ் நாடகத்தின் தொன்மை

தமிழின் தொன்மையான இலக்கண நூலாகிய தொல்காப்பியம்

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்

பாடல் சான்ற புலனெறி வழக்கம்" 1

என்றுநாடகம்பற்றி விளக்கியுள்ளது.

நாடகத்தை மக்கள் விரும்பிப் பார்த்ததை பட்டினப்பாலை

"பாடலோர்ந்தும் நாடகம் நயந்தும்" 2

என்று குறித்துள்ளது. சிலப்பதிகாரம் நாடகம் குறித்த பல்வேறு செய்திகளைத் தருகின்றது. சிலப்பதிகார உரை மறைந்த நாடகப்பனுவல்களைப் பட்டியலிடுகின்றது. அரசர்கள் நாடகம் இயற்றினர் என்பதை மத்தவிலாசப்பிரகசனம் எனும் நாடகத்தின் வழி அறியமுடிகின்றது. சோழர்கள்

காலத்தில் நாடகம் வேத்தியல் பொதுவியல் என்று வகைப்படுத்தப்பட்டிருந்தது.

"நடமேநாடகம்கண்ணுள்நட்டம்
படிதம் ஆடல் தாண்டவம் பரதம்
ஆறுதல் தூங்கல் வாணி குரவை
நிலையம் நிருத்தம் கூத்தெனப் படுமே" -

என்கிறது திவாகர நிகண்டு. காலந்தோறும் பல்வேறு மாற்றங்களுடன் வளர்ந்த நாடகம் சங்கரதாஸ்சுவாமிகளால் புத்துயிர்பெற்றது. தமிழகத்தில் சிறுவர்களே முழுக்க முழுக்கச் சேர்க்கப்பட்டு தமிழகத்தில் பல நாடக சபைகள் தோன்றின. ” சங்கரதாஸ்சுவாமிகள் “சமரச சன்மார்க்க சபை” என்ற குழுவைத்தொடங்கினார் அது பல சபைகள் உருவாகக் காரணமாக அமைந்தது. மதுரையில் பாலமீன ரஞ்சனி சங்கீத சபா, ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி, மதுரை தத்துவ மீனலோசனி வித்துவபாலசபா என பல சபைகள் தோன்றின. தமிழ் இலக்கிய அறங்களை, நீதிகளை விளக்குவதோடு கலைஞர்களும் ஒழுக்கத்தைப் பேணுபவர்களாகத் திகழ வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு நாடகக் குழுக்கள் தோற்றம்பெற்றன. இக்குழுக்கள் கூத்தாடிகளின் ஒழுக்கம் குறித்த கருத்தியலை மாற்றியது. சமூகசீர்திருத்த நாடகங்கள், மீட்டுருவாக்க நாடகங்கள், வீதி நாடகங்கள் என நாடகம் உருமாறி சமூகத்தில் இன்றுவரை விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றது. நாடகப்பயிற்சிப் பட்டறைகள் தமிழகத்தில் மிகச்சிறந்த நாடக ஆளுமைகளை உருவாக்கியுள்ளது. நாடகம் தொடர்பான நூல்கள் வெளிவருகின்றன. நாடகக்கருத்தரங்குகள் அண்மைக்காலங்களில் நடைபெறுகின்றன. வானொலி நிலையங்களில் நாடகப்போட்டிகள் நடைபெறுகின்றன. பள்ளி, கல்லூரிகளில் நாடகங்கள் நடைபெற்றுவருகின்றன. இங்ஙனம் வளர்ந்து வரும் நாடகங்களுள் குறிப்பிடத்தகுந்தது குழந்தைகளுக்கான நாடகங்கள்.

“ சிறுவர் நாடக வளர்ச்சிக்குப் பெரிதும்துணை செய்தவை பள்ளிக்கூடங்களே …சிறுவர் நாடகத்திற்கு ஊக்கமளித்து உயரச்செய்தது சென்னை வானொலி நிலையமே வாரத்திற்கு இரண்டு சிறுவர் நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றிலும் ஒரு நாடகம் நிச்சயம் இருக்கும். அதனால் ஆண்டுக்குச் சுமார் நூறு நாடகங்களை உருவாக்கியது.” 3

வானொலி அண்ணா என புகழப்பட்ட ர.அய்யாசாமி, பூவண்ணன், உலகநாதன், கூத்தபிரான் போன்ற நாடக ஆளுமைகளால் சிறார் நாடகங்கள் வளர்ந்தன. சிறார் நாடக ஆளுமைகளுள் குறிப்பிடத்தகுந்தவர் வேலுசரவணன். இவரது நாடக அறங்களையும் மு.இராமசுவாமியின் வலியறுப்பு நாடக அறத்தையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**குழந்தை நாடக இயல்புகள்**

மிக எளிய வசனங்கள் இடம்பெறவேண்டும். அறங்களை உணர்த்தவேண்டும். குழந்தைகள் விரும்பும் விலங்குகள் பறவைகள் கதை மாந்தர்களாள அமைய வேண்டும். நீண்ட வசனங்களைத் தவிர்க்க வேண்டும். ஏற்றத்தாழ்வின்றி அனைவருக்கும் வசனங்கள் ஒரேமாதிரி அமைய வேண்டும் .குழந்தைகள் மட்டுமல்ல குழந்தைகளின் மனோநிலை உள்ள எவரும் நடிக்கலாம்.

**குழந்தை நாடக வகைகள்**

திரு.இராமானுஜம் அவர்கள் குழந்தை நாடகத்தை இருவகைகளாகப் பிரித்துள்ளார். அவை

1. தன்மயீபாவ நாடகம் - தன்னை உயிருள்ள ஒருபொருளாகக் கற்பனை செய்து கொண்டு நடிப்பது .
2. உருவகபாவ நாடகம் - தன்னை உயிரற்ற ஒருபொருளாகக் கற்பனை செய்து கொண்டு நடிப்பது .

**வேலு சரவணனின் நாடகங்கள்**

ஆழி எனும் நாடகக் குழுவின் வாயிலாக தமிழகமெங்கும் நாடகங்களை நிகழ்த்திவருகிறார். ஆசிரியர்களுக்கு பயிற்சிகளை நடத்தி வருகிறார். தங்க ராணி, மாலுமி, ஐரபாசி, தேவலோக யானை, பூதக்கண்ணாடி, கடல் பூதம், அல்லி மல்லி, காவல்கார கோமாளி போன்ற படைப்புகளை குழந்தைகளுக்கு வழங்கியவர். வேலுமாமா, கோமாளி என்று குழந்தைகளால் அன்பாக அமைக்கப்படுபவர். சாகித்ய அகாடமி வழங்கும் 'பால சாகித்ய புரஸ்கார் விருதை' 2017-ஆம் ஆண்டு பெற்றவர் தொடர்ந்து குழந்தைகளுக்காகச் செயல்படுபவர். புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் நாடகவியல் துறைத் தலைவராகப் பணியாற்றிவருகிறார்.

“ நவீன குழந்தை நாடகத்தில் ஒரு பாய்ச்சலை ஏற்படுத்தியவர் வேலு சரவணன் ஆவார். பாண்டிச் சேரி, கடலூர் பகுதிகளில் நூற்றுக்கணக்கான பள்ளிகளில் குழந்தை நாடகங்களை நடத்தியவர். பொதுவாக இவருடைய நாடகங்கள் இயற்கைக்கும் குழந்தைக்கும் உள்ள உறவைச் சிறப்பாகப் பேசுவதாகும்.” 4

பூதக்கண்ணாடி, மாலுமி, பொம்மைக்காவலன் ஆகிய நாடகங்களில் இடம்பெறும் வாழிவியலறங்களைக் காண்போம்.

**பூதக்கண்ணாடி**

காட்டுச் சிறுமி, காடா, மணி, கோமாளி என குறைந்த மாந்தர்களைக்கொண்டு சமூக அறத்தைச் சொல்லும் நாடகம். பூதக்கண்ணாடியால் ஈர்க்கப்பட்ட செல்லீ என்ற சிறுமி நகரத்திற்குச் செல்கிறாள். தன் நண்பர்களை இழக்கிறாள். இவையனைத்தும் கனவு என அறிந்து மகிழ்கிறாள். இந்நாடகத்தின் வழி சட்டங்கள் ஏழைகளை அலைக்கழிப்பதையும் மனிதர்கள் மரங்களை வெட்டுவதையும் கண்டு வருந்துகிறாள். மணி என்ற (நாய்) கதாபாத்திதைத்தின் வழி மனிதர்களின் சூழ்ச்சி விளக்கப்படுகிறது. மணி தன் நண்பர்களிடம் என்னை விட்டுச்செல்லுங்கள் இல்லையெனில் நீங்களும் கொலைக்குற்றம் சாட்டப்பட்டு தண்டிக்கப்படுவீர்கள் என்று கூறுகிறது. மனிதர்கள் எருமைகளைப்பலியிடுவதைக் கண்ட செல்லி வருத்தமடைகிறாள்.

“ நான் பட்டணத்துக்குப் போவேன் … ஏன்
இப்படிச்செய்யறீங்கன்னு கேட்பேன்.
நான் பட்டணத்துக்குப் போவேன் …
ஏன் இப்படிச்செய்யறீங்கன்னு கேட்பேன் ..நான் வாரேன் ” 5

எனும் செல்லீயின் கூற்றிலிருந்து சிறுவர்கள் அநீதியை எதிர்த்துக் கேட்பார்கள் எனும் சந்தனையைப்

பதிவிட்டுள்ளார். இந்நாடகத்தின் வழி விலங்குகளைப்பலியிடக்கூடாது, விசாரணையின்றி தண்டனை வழங்கக் கூடாது எனும் அறங்கள் உணர்த்தப்படுகின்றன. வனத்திலுள்ள விலங்கு பறவை மரங்களுக்கு நகரம் பாதுகாப்பற்றது. பூதக்கண்ணாடி வழி தன் நண்பர்களைக் கண்டு வியந்த செல்லீ அக்கண்ணாடியால் தன் நண்பர்களை இழக்கிறாள். சட்டத்தின் அவலம், காவலர்களின் போக்கு போன்றவற்றையும் இந்நாடகம் விளக்குகிறது. செல்லீ தனக்கு பூதக்கண்ணாடி வழங்கிய கோமாளியை நகரத்தில் கண்டதும் மகிழ்ந்து தன்னையும் தன்நணபர்களையும் காப்பாற்றுமாறு வேண்ட கோமாளி காணாததுபோல் செல்கிறான். நண்பர்களுக்கு உதவ வேண்டும், மரங்களை வெட்டக் கூடாது, திருடக்கூடாது என பல சமூக அறங்களை விளக்குகிறது. உணவினைப் பங்கிட்டு உண்ண வேண்டும். பூதக்கண்ணாடி நாடகம் குழந்தைகளுக்கு மட்டுமல்ல மக்களுக்கான அறங்களை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

**கடல் பூதம்**

இந்நாடகத்தின் வழி கோரி எனும் ஏழைச்சிறுவன் வாயிலாக சமூக அநீதியை எடுத்துரைக்கிறார்.

> கோரி எல்லோரும் அவரவர் பல்லை அவரவர் தானே
> தேய்த்துக்கொள்கிறார்கள்? எல்லோருக்கும் கை, கால் இருக்கிறது.
> பிறகு ஏன் தங்கள் துணியைத் தாங்களேதுவைத்துக்கொள்ளாமல்,
> இப்படிச் சலவை செய்ய அனுப்புகிறார்கள்?" 6

என்று வருத்தத்துடன் கேட்கிறான். இக்கேள்வி தொழிலை பிறப்பின்அடிப்படையில் கொண்டு வந்த கொடுமையை மட்டுமல்ல மனிதர்கள் தங்களது வேலைகளைத் தாங்களே செய்வது நல்லதுஎனும் அறத்தை உணர்த்துகிறது. கோரியின் கல்வி பயில வேண்டும் எனும் ஆவல் கோரியைப் போல் பல சிறுவர்கள் குழந்தைத்தொழிலாளர்களாக வாழும் அவலத்தைச் சுட்டுகிறது.

**பொம்மைக்காவலன்**

இரவுநேரக் காவலர்களின் சிக்கலை உணர்த்தும் நாடகம். முதலாளிகள் காவலர்கள், மற்றும் தங்கள் வீட்டில் வளர்க்கும் நாய்களிடம் கடுமையாக நடந்து கொள்வதை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. தன் வீட்டிலுள்ள மரகதக் கல் திருடப்பட்டதை அறிந்த பட்டுவேட்டித்தடியன் (முதலாளி) நாய்களை அடித்துத் துன்புறுத்துகிறான். அதை அறிந்த காவலாளி நாய்களுக்கு உதவுகிறான். அப்பொழுது எல்லோரிடமும் அன்புகாட்டி ஒருவருக்கொருவர் பாதுகாப்பாய் வாழ்வதே வாழ்க்கை எனும் வாழ்வியலறத்தை உணர்த்துகிறான். மனிதம் தொலைந்து அறம்பிறழும் இன்றைய சூழலில் மனிதம்போற்றப்படவேண்டும் என்பதை வலியுறுத்திவரும் பேராளுமகள் பலர் . அவர்களுள் சிறப்பிடம் பெறுபவர் மு.இராமசவாமி.

**சமூகமாற்றம்**

மு.இராமசுவாமியின் வலியறுப்பு வாழ்க்கையில் சக மனிதர்களோடு மனிதர்களாய் கவுரவத்தோடு வாழ வேண்டும் என்ற திருநங்கைகளின் ஆவலைப் புறந் தள்ளிவிடவோ நிராகரித்து விடவோ முடியாது என்பதைக் கருப் பொருளாகக் கொண்டு இயங்குகிற நாடகம். இதன் சிறப்பம்சம் பிரியாபாபு உள்ளிட்ட திருநங்கைகளே பாத்திரங்களாய்ப் பங்கேற்றதுதான். மனித உடலில் குரோமோசோம்களின் மாற்றத்தினால் ஏற்படும் சிக்கலை மட்டும் சொல்லாது அதற்கான தீர்வினையும்

சுட்டியுள்ளார். இந்நாடகத்தில் தீராத வலி, தீர்க்கப்படவேண்டிய வலி, தீர்ந்த வலிகளைச் சுட்டி இவ்வலிகளை நீக்கவேண்டிய கடமை நமக்கானது என்கிறார்.

“மானமும் அறிவும் மட்டுமே
மனிதர்களின் சொத்து மானத்தை விட்டுவிடாதீர்கள்
அறிவியலால்அழகுபடுத்திக் கொள்ளுங்கள்
தானாய் எல்லாம் மாறும் என்பது பழைய பொய்
இதனை மனதில் கொள்ளுங்கள்.”7

என்ற கூற்றிலிருந்து வாழ்வதும் வீழ்வதும் தனி மனிதனின் கைகளிலுள்ளது. மனிதம் போற்றப்பட வேண்டும் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் உடலில் ஏற்படும் மாற்றத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் . இம்மாற்றத்தை பொதுமக்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார்.

**முடிவுகள்**

- உயிர்களிடத்தில் அன்புகொள்ள வேண்டும்.
- உயிர்க்கொலை கூடாது.
- இயற்கையை அழித்தல் கூடாது.
- தொழிலில் ஏற்றத்தாழ்வு கூடாது.
- தங்களுக்கான வேலைகளைத் தாங்களே செய்துகொள்ள வேண்டும்.
- குழந்தைத்தொழிலாளர்களை முற்றிலும் ஒழிக்க வேண்டும்.
- உடலை விற்றுப்பிழைப்பது பாவம்.
- மானத்தைப் பேண வேண்டும்.
- மனிதம் போற்றப்பட வேண்டும்
- கல்வி ஏற்றத்தாழ்வை நீக்கும்.

**அடிக்குறிப்புகள்**

1. இளம்பூரணர் (உ.ஆ) தொல்காப்பியம் – நூற்பா -53
2. முனைவர்.இரா. ருக்மணி, (உ.ஆ) பட்டினப்பாலை – 113
3. பூவண்ணன் –பக் -116
4. கீற்று – இணையஇதழ் பக்-7
5. மாலுமி –பக்- 65
6. கடல்பூதம் –பக் 47
7. வலிஅறுப்பு- பக் 43

**துணைநூற்பட்டியல்**

1. மு.இராமசுவாமி , ரௌத்திரம் பழகு
நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிமிடெட், சென்னை-8
2. இளம்பூரணர் (உ.ஆ) , தொல்காப்பியம்
மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்-1
3. பூவண்ணன் , சிறுவர் இலக்கிய வரலாறு

வானதிபதிப்பகம், சென்னை-17
4.ருக்மணி.இரா ,பட்டினப்பாலை
காவ்யா, இரண்டாம் குறுக்குத்தெரு , சென்னை- 24
5.வேலு சரவணன், மாலுமி
காவ்யா ,இரண்டாம் குறுக்குத்தெரு, சென்னை- 24